தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச்சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் ௨௧ | பார்த்திப—வைகாசி—1945—மே | மலர் ௨

தமிழ் எழுத்தில், திருத்தமா?

உலக மொழிகளிலுள்ள எழுத்துக்களின் தோற்ற வளர்ச்சிகளும், வேறுபாடுகளும், காலத்தையொட்டி நிகழ்கின்றவென்பதனை யாம் ஒப்புக்கொள்ளுகின்றோம். மக்களுள் ஒருவர் தமது கருத்தைப் பிறர் ஒருவர்க்கு இடர்ப்படாது தெரிவித்துக் கொள்ளுதற்குக் கருவியாய் உதவுவதே ஒரு மொழியின் பயனாகும். இங்ஙனம் மக்கள் தம்மோடு தொடர்புடையாருக்குத் தம் கருத்தை அறிவித்தற்பொருட்டு உலகில் வழங்கிவரும் மொழிகள் பன்னூறு மொழிகளாகும். அங்ஙனம் மக்கள் வழங்கிவரும் பற்பல மொழிகளுள்ளும் சிற்சில மொழிகளே பேசவும் எழுதவும் படுவனவாகும். அவற்றுள்ளும் சிலவே இலக்கண இலக்கிய நூல்களையுடையன. அவற்றுள்ளும் சிலவே மிகப் பழைய மொழிகளாயுள்ளன. இம் மூவகை நலங்களும் வாய்ந்து மூவாத் தன்மையிலமைந்து மிளிர்வது நம் தமிழ்மொழியாகும். பண்டிருந்து பேசவும் எழுதவும் பெற்றுச்சிறந்த இலக்கண இலக்கிய நூல்களும் வாய்க்கப்பெற்று, எக்காலத்தும எவ்விடத்தும் எப்பொழுதும் தமமைப் பயில்வார்க்கு அறிவின்பத்தை மேன்மேலும் பெருக்குவது நம் தமிழ் மொழியாகும். இம் மொழியிலமைந்த எழுத்துக்களைத் திருத்த வேண்டுமேல் எத்துணை அறிவு திருந்தப் பெற்றவராக இருத்தல் வேண்டும் என்பதனைத் தமிழ் எழுத்தைத் திருத்த வேண்டுமென்பார் திருத்தமுற அறிந்திருக்க வேண்டாமா?

மகம்மதிய மதத்தவரான மொகலாய மன்னர்கள் வட நாட்டின்மேல் படையெடுத்து அங்குள்ளவர்களை வென்று 'தில்லிப்' பட்டினத்தைத் தலை நகராகக் கொண்டு ஆட்சி செலுத்திய போது தில்லிமா நகரிலும் அதனைச் சூழ்ந்த இடங்களிலும் பிராகிருதச் சிதைவான ஒருவகைத் திரிபு மொழி இந்தி என்ற பெயருடன் வடநாட்டில் வழங்கி வந்தது. அம்மொழி பேச்சு வழக்கில் இருந்ததேயன்றி நூல் வழக்கிற் சிறிதும் இடம் பெறவில்லை. என்னெனின்? அது நாகரிகமில்லாத மக்களால் பேசப்பட்டுப் பற்பல மாறுதல்கள் அடைந்தவண்ணமாய் நடைபெற்று வந்த தாதலாலும்

அறிவுடையோர் தோன்றி அம்மொழியைச் சீர்திருத்தி எழுத்துக்களை உண்டாக்கி இலக்கண இலக்கிய நூல்களையும் உண்டாக்கி எழுத்து வடிவில் அதனை நிலைபெறுத்தி வையாததனாலும் அதற்கு அந்நாளில் நூல் வழக்கு இல்லாது போயிற்று. மகமதிய அரசு தில்லிமாநகரில் நிலைபெற்றபின் அவ்வரசு கொணர்ந்த அராபிமொழி, பாரசீக மொழிச் சொற்கள் ஈண்டுப் பிராகிருத மொழியினின்று சிதைந்து வழங்கிய மொழியோடு மிகுதியுங் கலந்து ஒரு புதுத் தோற்றங் கொண்டு உருது எனப் பெயர்பெறலாயிற்று. உருது என்ற சொற்குக் "கடைத்தெருமொழி" அல்லது "பாசறை" எனப்பொருளாம். அரேபியாவிலிருந்து, இந்திய வடநாட்டின் மேல் படையெடுத்து வந்து வடநாட்டில் பாசறையில் தங்கியிருந்த படை வீரர்கள் ஆண்டு வாழ்ந்த மக்கள் வழங்கிய சொற்களோடு தங்கள் தாய் மொழியாகிய பாரசீக அராபிய மொழிச் சொற்களைக் கலந்து பேசினமையால உண்டாய ஒரு கலவை மொழிக்கு "உருது" என்று பெயரிட்டனர். உருது, இந்தி இந்துஸ்தானி என்பவை ஒரே மொழிக்கு வழங்கும் மூன்று பெயர்கள் என்பார் கூற்று ஆராய்ச்சிக் குரியதாம். கி. பி. பதினான்காம் நூற்றாண்டிலே "நவாபு குஸ்ரோ" இந்தி மொழியைக் கையாண்டு வந்தார்; ஷாஜஹான் என்னும் மகமதிய மன்னனின் ஆட்சிக் காலத்தில் "பரிஷ்தா" என்ற வரலாற்று அறிஞர் இவ்விந்தி மொழிக்கு 'இந்துஸ்தானி, என்று பெயரிட்டார் என்று வரலாற்றறிஞர் கூறுகின்றனர். இம் மொழியின் வரலாறு இங்ஙனமாகவும் வடநாட்டில் பல்வேறு மொழியினராகப் பிரிந்துள்ள மக்களுட் சிலர் இந்தி மொழியோடு வடமொழிச் (சமஸ்கிருத) சொற்களைக் கலந்து வழங்குதலை மறுக்கின்றனர். உருது மொழியோடு பாரசீகச் சொற்களை மிகுதியுங் கலந்து வழங்குதலை மற்றொரு சாரார் மறுக்கின்றனர். இவ்விருவரையும் தம் பக்கம் இழுக்க எண்ணி "இந்துஸ்தானி இயக்கம்" என வட நாட்டு முதலாளிகள் ஒரு கலவை மொழி இயக்கத்தைத் தோற்றுவித்து இம் மக்களை அம்மொழிக்கு அடிமையாக்க எண்ணுகின்றனர். அஃதாவது இவ்விருசாராரும் ஏற்றுக் கொள்ளும் முறையில் இவ்விரு மொழிக்கும் பொதுவாயமைந்த ஒரு பொதுமொழியை ஏற்படுத்துவதே நல்ல முடிபென அவர்கள் கூறுகின்றனர். உருது மொழியில் பற்றுக்கொண்ட முகம்மதியர்களையும், இந்தி மொழியில் பற்றுக்கொண்ட இந்துக்களையும் ஒன்று கூட்டுவான் வேண்டி "நீங்கள் வேண்டுமேல் இந்தி மொழியை உருது எழுத்துக்களில் எழுதிக் கொள்ளுங்கள்" என முகம்மதியர்களுக்குக் கூறியும், "நீங்கள் வேண்டுமேல் இந்தி மொழியைத் தேவநாகரி எழுத்தில் எழுதிக்கொள்ளுங்கள்" என இந்துக்களுக்குக் கூறியும் இதுகாறும் இரு சாராரையும ஏமாற்றி வந்த வடநாட்டு முதலாளிகள் இந்தியப் பொதுமொழி இந்துஸ்தானி என்று கூறித்தென்னாட்டில் இந்தியைக் கட்டாய பாடமாகப் புகுத்துதற்கு முயறசித்தனர். "இந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் பொது மொழி இந்துஸ்தானி" என்றனர், "பாபுதண்டனின்" முயற்சியால், தன்னாடசி மன்றம் (Congress) "இந்துஸ்தானியென்பது வட இந்தியாவில் சிற்றூரிலுள்ள இந்துக்களாலும் முகமதியர்களாலும் பேசப்பட்டுத் தேவநாகரி அல்லது உருது எழுத்துக்களால் எழுதப் பெறும் மொழி" என விளம்பரஞ் செய்தது. இவ்விளம்பரத்தை மதியாது வட நாட்டில் உருதுமொழிப் பற்றுள்ள

முகம்மதியர்களும், இந்திமொழிப் பற்றுள்ள இந்துக்களும் தத்தம் பழக்க வழக்க வழியே ஒழுகுகின்றனர். இவ் விருசாராரையும் இதுபோது ஒன்று கூட்டுவான் வேண்டி வட நாட்டுத்தலைவர்கள், இந்திக்கும் உருதுவிற்கும் நூற்றுக்கு எண்பது சொற்கள் பொதுவானவையெனவும், எஞ்சிய இருபது சொற்களை இரு மொழியிலிருந்தும் எடுத்துக் கொள்ளலாம் எனவும், இவ்வாறு எடுத்துக்கொண்டு வேறுபாடின்றி மொழி வகையில் இந்துக்களும் முகமதியர்களும் ஒரு பொது மொழியால் ஒன்றாக ஒருப்பட்டுவிட்டால் இந்திக்கும் உருதுக்கும் பொதுவான சொற்களைத் திரட்டி ஒரு பொது மொழியை உண்டாக்கி விடலாம் எனவும், இப்பொது மொழியே எதிர்கால இந்தியப் பாராளும் மன்றத்தில் பேசப் பெறும் எனவும், இதுவே இந்தியப் பொது மொழியாய் இலங்குமெனவும் இப்பொது மொழிக்குத் தென்னாட்டவரும் தலைகுனிந்து கற்றே ஆகவேண்டுமெனவுங் கூறி ஆரவாரிக்கின்றனர். இந்துஸ்தானி மொழியின் எழுத்தைக் குறித்து வட நாட்டுத் தலைவர்களுக்குள்ள மாறுபாட்டை எண்ணிப் பார்த்தாவது தமிழெழுத்தைத் திருத்த வேண்டுமென்பார் தம் கொள்கையைக் கைவிடுவாராக! ஒரே மொழிக்கு இருவகையெழுத்துக்களிருத்தல் எத்துணை வியப்பினைத் தருகின்றது பாருங்கள்! உருது மொழியென்றவுடன் இந்துக்கள் சீறுகின்றார்கள்; இந்தியென்றவுடன் முகம்மதியர்கள் சீறுகின்றார்கள்; இவ்விருசாராரையும் ஒரு முகப்படுத்தற்குவழி இவ் விருமொழிப் பெயரையும் நீக்கிப் பழையகள்ளைப் புதிய மொந்தையில் ஊற்றிப் புதுப்பெயரிட்டாற்போல இந்தி மொழிக்கு இந்துஸதானியென மாற்றுப்பெயரிட்டு மக்களை மயக்கி அம் மொழிக்கு அடிமைப் படுத்தலாம் என வடநாட்டு முதலாளிகள் மயக்கவுணர்வு கொண்டு பணியாற்றுகின்றனர். இம் மயக்கவுணர்வு இந் நாட்டினர்க்கும் ஏற்றதன்றெனக் கூறுகின்றோம். வடநாட்டு மொழியாகிய இந்தி மொழியை உருது எழுத்தையும் தேவ நாகரி எழுத்தையும் கொண்டு எழுதுகின்றாற்போல, தமிழ் மொழியையும் தாம், தோற்றுவிக்கும் எழுத்துக்களால் எழுதுவேமென இயம்புகின்றனர். ஒரு மொழியிலுள்ள எழுத்துக்களைத் திருத்தவேண்டுமேல், திருத்த விரும்புவார்க்கு அம் மொழியில் நிரம்பிய புலமை யிருத்தல் வேண்டும். அம்மொழி எழுத்துக்களிலுள்ள குறைபாடுகளை அம் மொழி பேசும் மக்களுக்கு எடுத்துக் காட்டவேண்டும். அக்குறைகளை எல்லாந் தொகுத்து அம்மொழியில் சிறந்த புலமை பெற்றுள்ளோர் ஆராயவேண்டும். அங்ஙனம் ஆராயும்பொழுதும் அம்மொழி எழுத்தியல் ஒலி நுட்பத்தை நன்கு நுனித்தறிதல் வேண்டும். அம் மொழி எழுத்துக்களின் பிறப்பியலமைப்பு ஒலியிலக்கணத்திற்கும் மொழிநிறைவிற்கும் ஒத்து வருகின்றதா என்பதனையும் நன்கு ஆராய வேண்டும். இங்ஙனம் பல்லாற்றானும் ஆராய்ந்து பார்த்து அம் மொழியிலுள்ள எழுத்துக்களால் அம்மொழிக்கு உள்ள குறைபாடுகளைப் போக்க வியலாதெனின் அம்மொழி எழுத்துக்களை அறிஞரின் துணைகொண்டு திருத்தஞ் செய்யவேண்டும். இங்ஙனமெல்லாம் ஆராய்ந்து செய்யவேண்டியதிருக்க, ஆராய்ந்து பாராது துடுமெனத் தமிழ் எழுத்தைத் திருத்துவேமெனத் தமிழ்ப் பற்றில்லார் துணிந்து கூறுகின்றனர். இங்ஙன முரைக்கும் இவர்கள் கூற்றைத் தமிழறிஞர்கள் எண்ணிப்பார்க்க வேண்டுமென வேண்டுகின்றோம்.

சேது காவலர் சீர்த்திபெற் றோங்குக!

தமிழ்நாட்டிற் பரம்பரையாகத் தமிழ்வளர்த்துத் தமிழ்ப் புலவர்களைப் புரந்து புகழ்கொண்டு மிளிர்ந்தோர் மிளிர்கின்றவர் இராமநாதபுரம் சேது மன்னரின் குடும்பத்தினரே யாவார்கள். இம் மன்னரின் முன்னோராற் றோற்றுவிக்ககப் பெற்றதுதான் மதுரைத் தமிழ்ச் சங்கம். யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களை ஆதரித்துத் திருக்குறள் திருக்கோவையார் போன்ற தமிழ் நூல்களைத் திருந்திய முறையில் அச்சியற்றி வெளிக் கொணர்ந்தவர்களும் இம் மன்னர் குடும்பத்தினரே யாவார்கள். காலஞ் சென்ற தென்கலைச் செல்வர் அறிஞர் சாமிநாதையர் அவர்களை ஆதரித்து நூல் வெளியீட்டிற்கு உதவியவர்களும் இம் மன்னர் குடும்பத்தினரே யாவார். சுருங்கக்கூறின் பிற்காலத் தமிழ் வளர்ச்சிக்கு நிலைக்களனா யிருந்தவர்கள் நம் சேது மன்னரின் முன்னோர்களே யாவர். சமய வளர்ச்சியிலும் நாட்டங்கொண்டு பரசமயக் கோளரியாய் இலங்கிய பெருமகனார் திரு. சோமசுந்தர நாயகர் அவர்களை ஆதரித்துச் "சைவ சித்தாந்தப் பிரசண்ட மாருதம்" எனும் பட்டம் வழங்கிப் பொற் சிவிகையும் சின்னங்களும் அளித்துப் போற்றியவர்களும் சேது மன்னர்களே யாவார்கள். இவை தாமோ! இவ் விந்தியநாட்டின் சமய நுண்மைகளை அமெரிக்க நாட்டினரும் அறிந்து போற்றவேண்டி, தென்கோடி வந்து கலங்கிய விவேகாநந்த அடிகளை ஆதரித்துப் பொருளளித்துப் போற்றி அடிகளை அமெரிக்காவிற்கு அனுப்பித் தங்கட்கும் இந்நாட்டிற்கும் புகழ்மிகப் பெருகச் செயலாற்றியவர்கள் சேதுமன்னரன்றோ? இந் நாட்டிற்கும் இந்நாட்டு மொழிக்கும், இந்நாட்டுச் சமயத்திற்கும் புகழுண்டாகும் முறையில் இச் சேது மன்னர் குடும்பத்தார் இது நாளும் செயலாற்றியுள்ளனர். இத்தகு சீர்த்திசால் மன்னர்களின் வழித்தோன்றலும் ஆங்கிலம் தீந்தமிழ் முதலிய பன் மொழிகளிற் புலமை பெற்றுத் திகழ்கின்றவரும் அஞ்சாமை ஈகை, அறிவு, ஊக்கம் முதலியவாக வள்ளுவனார் வகுத்த மாட்சிசால் குணநலங்களமையப் பெற்றவருமாகிய சேது காவலர் திரு. **சண்முக ராஜேஸ்வர நாகநாத** சேதுபதி அவர்கள் 4—5—'45-ஆம் நாள் சேது சமத்தான ஆட்சியுரிமையை அரசியலாரிடமிருந்து ஏற்றுக் கொண்டார்கள் என்ற செய்திகேட்டு மிக்க மகிழ்ச்சி யடைகின்றோம். உலக மக்களின் நாகரிக வளர்ச்சிக்குப் பகைஞராயிருந்தோராய **ஹிட்லரும் முஸோலினியும்** ஒழிந்தார்களென மக்கள் மகிழ பூக்கும் நேரத்தில் இவர்கள் ஆட்சி யுரிமையை ஏற்றுத் திகழ்கின்றார்க ளாதலின் இவர்க ளாட்சியில் மக்கள் துன்பம் ஒழிந்து இன்பம் பெருகி ஏற்றமுறுவர் என்பதற்கு இஃதோர் அறிகுறி என எண்ணுகின்றோம். மாட்சிசால் மன்னர் **சண்முக ராஜேஸ்வர நாகநாத** சேதுபதி அவர்கள் ஆட்சியில் தமிழ் மொழி தழைத்தோங்க இவர்கள் ஏற்பன செய்து இன் புகழ் கொள்வாராக! இறையின் னருளால் இவர்க ளாட்சி இனிதோங்க வேண்டி இறைவனை வழுத்தி வணங்குகின்றேம்.

இங்ஙனம்,
பொழிலாசிரியர்.

*எயில் கோடல்

மகா மகோபாத்தியாய. பண்டிதமணி. மு. கதிரேசச்செட்டியாரவர்கள்

தமிழ்நாட்டுப் போர் வகைகளுள் "எயில் கோடல்" என்பது ஒன்று. எயில் என்பது மதில்; கோடல்—கொள்ளுதல். எனவே ஓர் அரசன் தன் பகையரசனது மதிலைப் படைவீரர்களுடன் சென்று வளைத்துக் கொள்ளுதல் என்பதாம்.

தமிழ் நூலார் பொருளை அகம் புறம் என இருகூறாக வகுத்து அகத்திற் காதலையும், புறத்தில் வீரத்தையும் விரிவாக எடுத்துரைத்துள்ளார். புறப்பொருளாகக் கூறப்படுவன வேறுபல உளவெனினும் சிறப்பு முறையிற் பேசப்படுவது வீரம் பற்றிய போர்ச் செயலேயாகும். தொல்காப்பியம் என்னும் பண்டைத் தமிழிலக்கண நூலில், பொருளதிகாரத்துப் புறத்திணையியலில் இப் போர்ச் செயல்கள் எழு திணைகளாகவும் பற்பல துறைகளாகவும் வகுக்கப் பட்டுள்ளன. இரண்டரசர்கள் தம்முட் போர்செய்யக் கருதியக்கால், முதலில் ஒருவன் மற்றொருவன் நாட்டில் வாழும் புண்ணியப் பிறப்புக்களாகிய பசு முதலியவற்றைத் தீங்கு செய்யாமல் ஆங்கு நின்றும் அகற்றல் வேண்டித் தம்படை வீரரைக் கொண்டு களவினால் கவர்ந்துகொண்டு அவற்றைப் பாதுகாப்பான. இவ் வொழுக்கத்திற்கு வெட்சித்திணை என்று பெயர். திணை என்பது ஒழுக்கமாகும். வெட்சி முதலியன அவ்வவ் வொழுக்கத்திற்கு அறிகுறியாக அணிந்து கொள்ளப்படும் மலரையுணர்த்தும். பசு நிரை கவர்ந்து வரும் வீரர் அணிந்து கொள்வது வெட்சிப் பூவாகும். இப்பூப் பொன்னினால் ஆக்கப்பட்டு அரசனால் அவர்க்கு வழங்கப் படுவதும் உண்டு. கவர்ந்து கொள்ளப் பட்ட பசுநிரைகளை மீட்டுக் கோடலும் வெட்சித்திணைப்பாற் படும் என்பர்.

அதன் பின்னர் ஒருவன் நிலத்தை மற்றொருவன் கொள்ளும் வேட்கையால் போர் குறித்துச் செல்லுதல் நிகழும். இங்ஙனம் செல்லுதலையும், ஒருவன் மேற்சென்றால் அங்ஙனம் செல்லப்பட்டானும் தன்னிலம் அழியாமற் காத்தற்கு எதிரே படையெடுத்து வருதலையும் வஞ்சித்திணையாம் என்பர். இவ்வாறு போர்குறித்துச் சேறலை அரசர்க்குரிய சந்தி முதலிய அறுவகைக் குணங்களுள், "யானம்" என்பர் வட நூலார். போர்குறித்துச் சென்றவன் பகைவனது மதிலை வளைத்து முற்றுகையிடுதலையும், அம்மதிலுள் இருந்த வேந்தன் அம் மதில் சிதையாவாறு காத்துக் கோடலையும் உழிஞைத் திணையாம் என்பர். இக் கொள்கை தொல்காப்பியத்திற் கண்டது. இரண்டிரண்டு கூறாக இங்கே கூறப்பட்ட மூன்றன் கண்ணும் பிற் கூறுகளுக்கு வெவ்வேறு திணைப்பெயர் கூறுவாருமுளர். அதன்பின் இரு பெரு வேந்தரும் கை கலந்து படைகளுடன் போர் புரிதலைத் தும்பைத் திணையெனவும் கூறுவர்.

---

* 28—3—45ல் திருச்சி வானொலியிற் பேசப்பட்டது.

போரில் வெற்றிபெற்ற தன் படை வீரர்க்கு அரசன் பொன்னு லாக்கப்பட்ட பூவழங்குதலை

> "நிறஞ்சிதை கவயமொடு நிறம்புண் கூர்ந்து
> புறம்பெற வந்த போர்வாண் மறவர்
> வருக தாமென வாகைப் பொலந்தோடு
> பெறுநா ளமயம் பிறக்கிடக் கொடுத்து"

என்னுஞ் சிலப்பதிகார அடிகளாலும் அறியலாம். இத்துணையும் கூறி யவை தமிழர் போர்முறை வரலாற்று நிகழ்ச்சிகளின் சுருக்கமாகும். இவற்றுள் இங்கே எடுத்துக் கூறவேண்டியது ஓரரசன் தன் பகையர சனுடைய மதிலைப் படைவீரருடன் சென்று வளைத்துக் கொள்ளுத லாகிய எயில் கோடலாகும். தொல்காப்பியம் புறப்பொருள் வெண்பா மாலை முதலியவற்றில் எயில்கோடல் என்னும் சொல்லால் ஒரு துறை வகுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. தொல்காப்பியத்தில்:-

> "முழுமுத லரணம் முற்றலுங் கோடலும்
> அனைநெறி மரபிற் றாகு மென்ப"

என்று கூறப்பட்டுள்ளது. மதில் வளைத்தலை "முற்றல்" எனவும் அம் மதிலுள்ளிருக்கும் வேந்தன் அதனைக் காத்துக் கோடலைக் கோடல் எனவும் கூறியிருக்கின்றனர். புறத்திரட்டு என்னும் நூலில் பகைவனது மதிலை முற்றுகையிட்டு வளைத்துக் கோடல் எயில் கோடல் என்று கூறப்பட்டுள்ளது. அம்முறையே இங்கு விளக்கப் படுவதாகும்.

ஓர் அரசனுடைய நாட்டிற்கும் தலைநகர்க்கும் பாதுகாப்பாக வுள்ள அரண்கள் பலவாகும். தலை நகர்க் காப்பாகவுள்ள அரண் களுள் மதிலரண் சிறந்ததாகும். இம்மதிலரணுக்குப் புறத்தே அர ணாகவுள்ளவை ஆழ மிகவுடைய அகழியும், நீரும் நிழலுமில்லாத மரு நிலமும், மரஞ் செடிகள் செறிந்தகாடும், மலையும் என்னும் இயற்கை யும் செயற்கையுமாகிய அரண்கள் பலவாகும். இவற்றுள், கடனீரும் மலையும் மருநிலமும் இயற்கையரண்களாகும். அகழியும் மரஞ் செறிந்த காடும் இவற்றாற் சூழப்படும் மதிலும் செயற்கையரண்களா கும். இவ்வமைப்பை—

> "மணிநீரும் மண்ணும் மலையும் அணிநிழற்
> காடும் உடைய தரண்"

என்னுந் திருக்குறளானும்,

> "நிலவரை யிறந்த குண்டுகண் ணகழி
> வான்றோய் வன்ன புரிசை விசும்பின்
> மீன்பூத் தன்ன உருவ ஞாயில்
> கதிர்நுழை கல்லா மரம்பயில் கடிமிளை
> அருங்குறும் புடுத்த கானப் பேரெயில்"

என்னும் புறப்பாட்டானும் அறியலாம்.

இப்பாடற் பகுதியில் அகழியின் ஆழமும் மதிலின் உயரமும் காட்டின் செறிவும் நன்கு விளக்கப் பட்டிருத்தல் அறிந்து மகிழத் தக்கது. இவற்றுட் சிறப்பாகக் கருதத் தக்கது மதிலரண் ஆகும். இது கற்களாலும் சுடுமண்ணாகிய செங்கற்களாலும் சுண்ணாம்பு முதலியவற்றாலும் வன்மையுற மிக்க வுயரமும் அடியகலமும் உடை[illegible]

தாக அமைக்கப் படுவதாகும்.

இதனை :—

"உயர்வகலந் திண்மை அருமையிந் நான்கின்
அமைவரண் என்றுரைக்கும் நூல்"

என்னுந் திருக்குறளால் அறியலாம்.

இம் மதில் ஒன்றன்பின் ஒன்ருகப் பல அமைக்கப் படுதலும் உண்டு.

"தென்னம் பொருப்பன் நன்னாட் டுள்ளும்
ஏழெயிற் கதவம் எறிந்துகைக் கொண்டுநின்
பேழ்வா யுழுவை பொறிக்கும் ஆற்றலை"

என்னும் புறப்பாட்டில் ஏழு மதிலுள்ள தலை நகரம் ஒன்று பாண்டி நாட்டில் இருந்ததாகவும், அஃது இப்பொழுது "ஏழு பொன் கோட்டை" என்று வழங்கப்படுவதாகவும் அறிகின்ருேம்.

இத்தகைய அரண்களின் அமைப்பினுலேயே அரசனுடைய நாடு அல்லது தலை நகரம் பகைவரால் அழிவு நேராமல் பாதுகாக்கப் படுவதாகும். இப்பொழுது நடைபெறும மேலைநாட்டுக் கடும்போர் களில் இங்கிலாந்து முதலிய தீபங்கள் இயற்கையரணுகிய கடலாலும் செயற்கையரணுகிய மதிலாலும் பாதுகாக்கப் படுதலை அறிந்து வருகின்ருேம்.

இம் மதிற் சுவரிற் பகைவர் அணுகாவண்ணம் பலவகையான பொறிகள் அமைக்கப்படும் என்பதைச் சிலப்பதிகாரம் முதலிய பண்டை நூல்களில் விளக்கமாக அறியலாம். அப்பொறிகளாவன:- தானே அமபு எய்யும் வில்லும், சேர்ந்தாரைக் கடிக்கும் குரங்கும், கன் மாரி பெய்யும் கவணும், காய்ந்து இறைத்தலாற் சேர்ந்தாரைத் துன்புறுத்துவதாகிய நெய்யும், இரும்பை உருக்கியுமிழும் உலையும், கற்களை நிறைத்து வீசும் கூடையும், அகழியைக் கடந்து மதில் பற்று வாரைக் கோத்தெடுக்குந் தூண்டிலும, அணுகினுரைக் கழுத்திற் பூட்டி முறுக்குஞ் சங்கிலியும், உச்சியைக் கொததி மூளையை உறிஞ் சும் புள்ளும, மாற்ருன் பேற்சென்று கண்ணைக் குத்தும் சிச்சிலிப் பறவையும, மதிலிடத்தேறுவாருடம்பைக் கொமபினுற் குத்திக் கிழிக் கும பன்றியும், மதில பற்றுவார் கையைக் குத்தும ஊசியும், கோல் குந்தம், வேல் சூலம் முதலிய படைப் பொறிகளும் பிறவுமாம்.

இத்தகைய பொறிகளோடு இவற்றை அமயங் கண்டு இயக்கிப் பாதுகாக்கும் நல்ல வீரரையுடையதாகவும இருத்தல் வேணடும். வீரரில்வழி மதில் பாதுகாக்கப் படுதல் அரிதென்பதை—

"எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
இல்லார்கண் ணில்ல தரண்"

என்னும் திருக்குறள் வலியுறுத்தும்.

மேற்குறிப்பிட்ட பொறிகளேயன்றி வலிய பகை வீரர் ஏறுத கிடனில்லாதிருத்தற் பொருட்டு மதிற் சுவர்களில் நெய் பூசப்படுதலும் பகைவர்க்கு இழிவுதோன்ற மகளிர் உருவத்தை அச்சுவர்களில் அமைத்துப் பந்தும் பாவையுமாகிய கருவிகளை வீசச் செய்தலும் உண்டு என்பதைத் தகடூர் யாத்திரை என்னும் பழைய தமிழ் நூலி

"மறனுடை மறவர்க்கு ஏற விடனின்றி
நெய்யோ டையவி யப்பி"

எனவும்,

"பந்தும் பாவையும் பசுவரிப் புட்டிலும்
என்றிவை பலவும் சென்றுசென் றெறியும்
முந்தை மகளிரை இயற்றி"

எனவும் வரும் அடிகளால் அறியலாம்.

போர் நிகழ்ச்சிகளுள் பகை நாட்டு வேந்தனது மதிலை முற்றுகை யிடுதல் ஓர் அரசனது ஆற்றன் மிகுதியைப் புலப் படுத்துவதாகும். இருபெரு வேந்தருள்—

"வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்"

என்றபடி வலியின் நிலைமைகளை நிறுத்துணர்ந்து அவ்வலி மிகுதி யாகப் படைத்த அரசனே படை முதலியவற்றோடு வேற்று நாடு சென்று பகையரசனது மதிலை முற்றுகையிட இயலும். இங்ஙனம் முற்றுகையிடுதலால் வெளியிடத்திருந்து உள்ளே வரவேண்டிய பொருள்கள் வாராமல் தடைப்படுதலாலும், உள்ளிடத்திருப்போர் தப்பிப் பிழைத்து வெளிச் செல்லுதற்கு இயலாமையாலும் மதிலகத் தேயுள்ள அரசனுக்கும் குடி மக்களுக்கும் நேருந் துன்பங்கள் பலவாம். இத்துன்ப நிலையைப் பற்றிச் சோழன் நலங்கிள்ளி என்பான் ஆவூர் மதிலை முற்றுகை செய்திருந்த காலத்து அம்மதிலுள் அகப்பட்டுப் போர் செய்தற்கு முற்படாமலிருந்த நெடுங்கிள்ளி என்னும் சோழனை நோக்கிக் கோவூர் கிழார் என்னும் புலவர் பாடிய பாடற் கருத்து இங்கே நினைக்கத்தக்கது. அக்கருத்து வருமாறு:— "அரசே! யானைகள் உணவுப் பொருளின்மையால் கவளம் பெறு மலும், பிடியொடு கூடி நீராடன் முதலிய செய்யாமலும் நிலத்திற் கிடந்து புரண்டு இடியொலிபோற் கதறவும், பால் பெறுமையால் குழவிகள் அழவும், மகளிர் பூவின்றி வறுந்தலையை முடிக்கவும், இல்லந்தோறும் வாழும் மக்கள் நேர்ந்த இடுக்கண் கருதி வருந்திக் கூக் குரலிடவும் இவற்றைக் கண்டும் கேட்டும் நாணாது நீ அரண்மனையில் இனிதாக இருத்தல் வருந்தத் தக்கதாகும்; ஆதலால்:—

"அறவையாயின் நினதெனத் திறத்தல்
மறவையாயிற் போரொடு திறத்தல்
அறவையும் மறவையும் அல்லையாகத்
திறவா தடைத்த திண்ணிலைக் கதவின்
நீண்மதில் ஒருசிறை ஒடுங்குதல்
நாணுத்தக வுடைத்திது காணுங்காலே."

என்பதாகும். இதன்கண் வீரமுடையையாயின் போரினால் மதிற் கதவைத் திறத்தல் வேண்டும் எனவும், குடிகளிடத்து அளியுடையை யாயின் முற்றுகையிட்ட பகைவனை நோக்கி "இம் மதில் நின்னுடையது" என்று சொல்லித் திறக்கவேண்டும். இரண்டுமின்றி ஒருபால் ஒதுங்கியிருத்தல் நாணத் தக்கதெனவும் கூறியிருத்தலும் "வீர முடையை அல்லையாயின்" என்று கூற வேண்டியதை "அருளுடை யையாயின்," என்று நயம்படக் கூறியிருத்தலும் சிந்தித்து இன்புறத் தக்கன.

(தொடரும்)

எண்ணும் எழுத்தும்

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

வாழுமுயிர்க்கு இன்றியமையாது வேண்டப்படுவன எண்ணும் எழுத்து மெனக் கூறுவர் புலத்துறை முற்றிய சான்றோரெனத் தமிழ்மறை அருளிற்றாதலின், மாந்தராய்ப் பிறந்தாரனைவரும் தம் மொழிக்கண் வாழ்க்கையை நெறிப்படுத்தும் உண்மை அறிவினை வளர்த்து, அதனான் இம்மை மறுமை வீட்டின்பங்களைத் தெளிவுற நல்கும் பான்மையுடைய எண் பொருளாகிய விதி நூல்களையும், எண்சுவைமலிந்த இலக்கியங்களையும் ஒருதலையாகத் திறம்படப் பயில வேண்டுவது ஒருவாறு புலனாகும், பேருறுதிப்பயன் எய்துதற்கு இலக்கிய வுணர்வு இன்றியமையாத தாயிருப்பினும், விரும்பிய துறையை யடைதற்குச் சார்ந்த நெறியிற் செலுத்தும் தன்மையினை யுடைய அளவை நூற்பயிற்சியும், இலக்கண நூற்பயிற்சியும், நூலொடு மதி நுட்பம் விரும்புவோர்க்குத் தப்பாது வேண்டப்படுதலான், அவற்றைக் கண்ணென எடுத்துப் பாராட்டிய சிறப்பு, தமிழ்மொழிக்கே யுரித்து. இஃது, எண்ணும் எழுத்தும் சிறந்த கருவி நூல்களெனப் பண்டைத்தமிழ் நூல்கள் பாரித்துரைப்பதனானும், தமிழ் இலக்கணமும் அளவை நூலும் ஒரு தன்மையபோல் தோன்றுவதினானும், தமிழ்மொழி அளவைநூற் பிரமாணங்களுக்கொப்பச் சார்ந்தமைந் தொழுகுகின்ற சீர்மையானும் அறியப்படும்.

ஐம்பொறிகளினும் கண்கள், பல்தொழில் புரிந்து நல்லெழில் மிகுந்து நிற்றலால், கண்கள் சிறப்புடைத்து. கண்ணிற் சிறந்த பிற வுறுப்பு வேறில்லையாதலானும், கண் வாயிலாக மன அறிவு புலப்பட்டுத் தோன்றுகின்றமையானும், கண் இமையாது நிற்குங் காலை அதன் வழியே அறிவும் உள்ளமும் அசைவின்றி என்றும் ஒரு படித்தாய் வழிப்பட்டு நிற்கின்றமையானும், உயிரின் இயற்கை யாவும் கண்களின் குறிப்புக்கொண்டு தெளிகின்றமையானும், கண்களின் சிறப்பினைக் கருதியே, தமிழறிஞர், நூல்நுதலும் பொருண் முடிபை அளவை முறைகளால் ஆயும் அளவை நூற்பயிற்சியை எண்ணென்றும், நூல் நுதலும் சொன்முடிபை இலக்கண முறையால் ஆயும் இலக்கண நூற்பயிற்சியை எழுத்தெனவும் கொண்டு, இவ்விரண்டும் உணர்வுடை மாந்தர்க்குச் சிறப்பாக இருகண்களென விதந்தோதினர் 'எண்ணெழுத் திகழேல்' 'எண்ணாகி எழுத்துமாகி,' எண்ணு மெழுத்துங் கண்ணெனத்தகும்,' 'எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங், கண்ணென்ப வாழுமுயிர்க்கு.' 'எண்ணு மெழுத்துங் கண்ணிவை யாய்ந்திந் நூற்பயனைக், கண்ணுக காண்பார் காற்கதி,' 'ஏரணங் காண் என்பர் எண்ணர், எழுத்தென்பரின் புலவோர்' என்றமையானும், எண் அளவையும், எழுத்து இலக்கணத்தையும் உணர்த்துதல் காண்க. மற்றும் 'புல்லா

வெழுத்திற் பொருளில் வருங்கோட்டி' (நாலடியார்) என்றதில் எழுத் தென்பது இலக்கண மெனப் பொருள்பட்டு நிற்றலறிக. எனவே உலகத்துப் பொருள்களைக் காண்டற்குக் கண் கருவியாயிருத்தலே போன்று சொற்பொருட்டிறனை உற்றுணரற்கு அளவையும் இலக் கணமும் ஏற்ற கருவியாயிருக்கின்ற தென்பது தெளியப் பெறும்.

கருவி நூலுணர்ச்சியின்றி உறுதிப்பொருள்களின் உண்மையைக் காண்டலும், இலக்கியச் சுவை நிரம்பிய பண்டை நூற்களின் உட் பொருளையும் அறிதலுமரிது. ஞானமாகிய நற்பொருள் பயக்கும் கல்வியை எத்துணைத் துறையாக வகை செய்யினும், அவை யாவும் எண், எழுத்து என்ற இரண்டினுள் அடங்கும். வாழ்க்கைக்கு இன்றியமையாத கணித நூல் உண்மைப் பிரமாணங்களைக் கணித்து அதன் திறத்தை எடுத்துரைக்கின்றதனுன் கணிதத்தை எண ணென்பர் ஒரு சாரார். ககோள சம்பவங்களைத் தப்பாது கணித் தறிய, கணிதம் இன்றியமையாததினுன் எண்ணென்பதுவான நூலென்பர். மற்ருெரு சாரார் 'கற்பங்கை சந்தங்கா லெண் கண்' என்பது மணிமேகலை. கணித வுருவகத்தில் பதியின் இலக்கணம் பகர்வதில் வல்லராய்த் திகழ்ந்த தொல்லைத் தமிழர் இறையருளால் அன்பே வாயிலாக வீடு பெறற்குத் துணை செய்யும் மறைமொழி யையும் எண்ணென்கிருர். 'பல் பச்சிலையா லெண்ணுண்டு சாத்த' என்றவிடத்தில் எண் என்பது மறைமொழியினை உணர்த்துவதறிக. கணித மென்பது பொருள்களை அளந்தறிதற் கருவியாய் அளவை யுடன் ஒரு சிறிதே வேற்றுமையாய், கூர்ந்துணருங்கால் ஒரு தன்மைய போல் சிந்தனை முறைகளை வரை யறுத்து வரை விலக்கணங்களை இயம்புவதில் ஒன்றேயாய் முடிதலின், எண்ணென்பது கணித மொன்றே யெனக்கூறல் ஏற்புடைய தொன்றன்று. ஏனெனின் 'காண்டலனு யானங் கதை யருத்தா பத்தி யிவை, யீண் டுரைத்த வெண்ணெனவே யெண்' என்ற அடிகள் இவ்வுண்மை தேற்றுவதாம். எனவே எண்ணென்பது அளவை யென்றும், அளவை நூல் நுதலும் பொருள், சிந்திக்கும் சிந்தனை முறைகளின் வழுக்களை வழா நிலை களினின்றும் பிரித்து அறிவிக்கு மென்றும் பெறும்.

எழுத்தென்னும் பெயர் 'அகத் தெழுவளியிசை', 'எழுந்து புறத் திசைக்கும் மெய் தெரி வெளியிசை' என்றவாறு, வளி இசையின் எழுச்சியைக் காரணமாகக் கொண்டுள்ளது. எழுதுதல் எனப் படு வது இலக்கித்தலெனப்படும். இஃது 'இவ்வுருவு நெஞ்சென்னுங் கிழியின் மேலிருந்திலக்கித், தவ்வுருவு நினைப் பென்னுந் துகிலிகை யால் வருத்தித்து', என்ற சிந்தாமணி வரிகளால் நன்குணரப்படும். எழுத்தாலாய நூற்றெகுதியை உணர்த்தி குறிப்புச் சொற்களும் பொருள்களும் விரவி மக்கள் மாண்பு நிலை எய்தற்காய ஒப்பற்ற வுணர்வை ஊட்டி நல்லின்பம் நல்கும் பான்மையது இலக்கியமெனப் படும். இலக்கண நூற் பயிற்சியோ, எழுத்தாலாய மொழியின் ஒழுங்கை சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறற்கு வேண்டிய விதிகளை மட்டும் மொழியும் தன்மைத்து. மற்றும் எழுத்தென்பது ஓவியத்தை யும் கல்வியையும் உணர்த்தும். பரிபாடலுள் வந்துள்ள 'இன்ன பல பலஎழுத்து நிலை மண்டபம்' எனும் சொற்றொடருக்குப் பரிமேலழகர்

'சித்திர மண்டபம்' என்று பொருளுரைத்தவாற்றுலறிக. 'எழுத்தெனுமியையா வுள்ளக் கண்டிறத் திட்டான்' என்ற விடத்தும், எழுத்தென்பது கல்வியென்ற பொருளில் வழங்கிய தூஉம் காண்க. எழுத்துக்களில், வரி வடிவெழுத்தைப் போன்ருெவிக்கும் உரு உண்டென்றும், மொழிக்குக் காரணமாகிய ஒலியில், தலையாய உண்மைப்பொருளேக் காண்டற்குரிய உயிர், இறை, மெய் என்ற தத்துவங்களும், இயற்கைப் புது நலங்களுமுண்டென்று முணர்ந்த பழந்தமிழ் மக்கள், ஒலிகளே, உயிரென்றும் மெய்யென்றும் பாகுபாடு செய்து வகுத்து உயிரேருத மெய்யை மொழிக்கு முதலில் வைக்கத் தலைப்பட்டாரில்லை. ஆகவே, எழுத்தெனவே, அதனேடொற்றுமையுடைய மொழியும் ஒவியமும், மொழியாற் குறித்துணரப்படும் பொருளும், பொருளைக் கவினுறக் கூறும் யாப்பும் அணியும் அடங்கிற்றென்க.

அறமுதலுற் பொருளை ஆய்ந்து நுண் பொருளுணர்தற்கேற்ற கருவி நூல்களாயுள்ளவை எண்ணும் எழுத்துமே. இவ்விரண்டும் முறையே அளவையும் இலக்கணமுமென்க. சொல்லுணர்ச்சியின்றிப் பொருளுணர்ச்சி பெறப்படாதாகலின், சொற்றிறனுணர்த்தும் இலக்கண நூலுணர்ச்சியின்றிப் பொருளுணர்ச்சி பெறத்தகுதற்குரிய அளவை நூலுணர்வு தோன்றுதலியலாதென்பர், ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர். அளவை நூலுணர்ச்சியும், இலக்கண நூலுணர்ச்சியு முடையார்க்கன்றி ஏனையவருக்கு மெய்ப்பொருளை ஆய்ந்துணர்தலும், பேரவையின்கண் தம் கூற்றைப் பாகுபட மிகுதிப் படுத்தலுமியலாதென்பதூஉம்

(க) பண்ணிஞர்க்கில்லாத பாட்டின் பயன்போலுங்
கண்ணில்லார்க்கில்லாக்கவின் போலு—மெண்ணிலா
வஞ்சொ லளவை யறியா தவர்க் கில்லை
செஞ்சொ லளவிற் சிறப்பு

(உ) ஆற்றி னளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு

என அறிவினுற் பெரிய நீரார் அருளியதனுனறியலாகும். காரண காரியமாய் அமைந்துள்ள இவ்விரு நூற் பயிற்சியும் உறுதிப் பொருணுதலு முதுநூலாராய்ச்சிக்குக் கருவியாதலானே, கருவி நூல்களை நன்கு துருவி ஆய்ந்து, அற்றங்காக்குங் கருவியாம் அறிவினைக் கொண்டு முதுநூற்களின் கருப்பொருளை உணரும் உரனின்று உண்மைப் பொருள்களைப் பற்றி வார்த்தை சொலல், அரங்கின்றி வட்டாடியற்றே என்பர் அறிஞர்.

எண்ணுதற்கும் சொல்லுதற்கு மரிய பேராற்றலும் பெருஞ் சிறப்பும் வாய்ந்து உணர்வுடை மாந்தர் மாட்டும் இயல்பிலமைந்த சிந்தனை முறைகளே, அளவை நூற் பொருளாகும், காண இயலாததையும், காட்ட வொண்ணுததையும் தானே எளிதே காட்டவல்ல சிந்தனையின் சீரிய முறைகளையும் திறனையும் அளவை நூல் கற்பிப்பதால், அளவை நூலை நன்முறையாகத் துருவித் துருவி நுட்பமாய் ஆய்வார்க்கு மெய்ப் பொருள் புதை பொருள் போல்

புலப்படுவது வெளிப்படை. அளவை நூல், சுவை பயக்கும் சொன்னயத்தைத் தினைத்துணையும் பொருட்படுத்தாது, சிந்திக்கும் முறையின் வன்மை மென்மை நலத்தினையே அறிவிக்கும். அதனை அழகுபடத் தெளிவாக யாப்பமைதியாலும் அணியமைதியாலும் தொகை வகைப்படுத்தி வரம்பின் அடக்கி உரைக்கும் முறையினை அறிவிக்கும் நூல் இலக்கணம். மற்றும் பிறர் கோட்பாடுகளின் கருத்தையும், கூற்றின் கருத்தையும் நிலை நாட்டற்கு உறு துணையாவதும் இலக்கணமென்க. அக் கருத்துக்களின் பொருளின் பொய்ம்மை மெய்ம்மையினைக் காண்டற்கு மெய்த்துணையாவதும் அளவை நூல். எனவே, தானே மெய்ப்பொருளுண்மையினைக் காண்டலும், அதன் கருத்தைப் பிறர் கூற்றில் வைத்தறிதலும், கருத்துக்கள் முரணிய வழி அவற்றுள் மெய்யிது பொய்யிது வெனத் துணிதலும், மக்கள் அறிவு வளர்ச்சிக்கு, அளவை நூற்பயிற்சியும், இலக்கண நூற் பயிற்சியும் இன்றியமையாதென்பது பெறப் படுதல் காண்க. இக் கருத்தானன்றே, அளவை நூற் பயிற்சியின் இன்றியமையாச் சிறப்பினை நோக்கியே, அதன் பயனையும், அஃதில் வழிப்படும் இழுக்கினையும் நன்கு புலப்படுமாறு

(க) அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றாதவர்.

(உ) அளவின்கணின்றொழுக லாற்றார் களவின்கட்
கன்றிய காதலவர்.

(ங) களவென்னுங் காரறிவாண்மை யளவென்னு
மாற்றல் புரிந்தார்க ணில்

(ச) அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.

எனப் பொய்யில் புலவர் அருள் செய்வாராயினர்.

குறையாத ஊக்கமுடன் இலக்கணத்தை மட்டும் கற்றுத் தேர்ந்தவர் எந்நூலையும் படித்துணர வல்லராய்க் கற்றார்முற்கற்ற செலச் சொல்வார். ஆனால் அளவை நூலில் முதுவர், நிகழும் நிகழ்ச்சிக்குக் காரணம் ஒன்றுள்ளதை முதற்கண் உணர்ந்து, அது பிறிதொரு காரியத்திற்குக் காரணமாயமைவதையும் ஆர அமரச் சிந்தித்து அறிவர். இஃதோடமையாது அன்னார் தனக்கேனும் பிறர்க்கேனும் நேர்பவைகளைத் தனி நிகழ்ச்சிகளாக மேற்கொண்டு, துளக்கமற்ற நெஞ்சுடையராய், சிறிதும் மயங்காது, அவைகளை இசையத்தொடர்பு படுத்தும் வகை கண்டு, கண்டனவற்றிற்கெல்லாம் மனஞ் சுழலாது தன் வாழ்க்கையை வழுவாகாதபடி நடத்தக் கூடிய திண்ணிய சிலராய்த் திகழ்வர்.

அளவையும் இலக்கணமும் வேற்றுமைப்பட்டு நிற்பினும், எந் நூலமைப்பிற்கு ஏதுவாக நிற்கும் அளவை நூல் தமிழ் இலக்கணத்தோடு ஒப்புடையவாகி உண்மைப் பொருளை உணர்த்தும் பெற்றியில் பெரிதும் ஒற்றுமை நலங்கொண்டு ஒளிர்கின்றது. இது பற்றியே கல்வி கேள்விகளாற் றிருந்திய நுண்ணறிவு வாய்க்கப்பெற்ற தமிழ்த் தொல்லாசிரியர் இலக்கண வழுக்களை அளவைப் போலிகளென

மயக்கவுணர்வு கொண்டனர். மற்றும், அளவை நூலார் பதங்களை வரையறுத்துணர்த்தும் வகையும், இலக்கண நூலார் பெயர்களை வரையறுத்துணர்த்தும் வகையும் பெரும்பாலும் ஒத்திருக்கின்றதென அவைகளைக் கற்றுத் துறைபோயினூர் ஊகிக்கின்றமையால், அஃது அளவையும் இலக்கணமும் பொது வியல்பிற்றெனும் கோட்பாட்டை நிலைப்படுத்துகின்றது. எனவே அளவையும் இலக்கணமும், கண் எவ்வாறு பொருள்களின் உண்மை நிலையினைக் காட்டுகின்றதோ அஃதே போன்று அறிவின் உண்மை நிலையினைக் காட்டுகின்றது. மற்றும் ஒருவரையொருவர் உற்றுப் பார்க்கும் வகையில் ஒருவர் கண்களோடு மற்றவர் கண்கள் கலந்து, அவ்வழியே அவரது மனங்களும் உயிர்களும் கூட்டுறவால் ஒன்ருகி, அவர்களுயிர் உடம்பிலுறைத்து நில்லாது; அறிவு வெளியில் ஒன்று பட்டு நிற்பது போன்று, அளவை நூற் பயிற்சியும் இலக்கண நூற் பயிற்சியும் கருதற் கொண்ணுக் கடுவேகத்திற் சுழலும் சிந்தனையை யடக்கி ஒரு துறையில் மட்டும் உறைத்து நிகழச் செய்து அறிவு வெளியில் ஒரு வழிப்பட்டு நிற்க உதவுகின்றதென்பதும் தெற்றென விளங்குகின்றது. அறிவு, கல்வியின் கண்ணதாகலான் அக்கல்விப் பேறு வாய்க்கப் பெருதார் கண் புண்ணுயிற்றென, 'கண்ணுடையரென்பவர் கற்ருேர் முகத்திரண்டு, புண்ணுடையார் கல்லாதவர்' என்ற குறட்பாவில் செந்நாப் போதார் கவினுறக் கூறியது ஈண்டு வியக்கத்தக்கதொன்ருகும்.

ஆகவே இது காறும் கூறிய வாற்ருன், எழுத்தாலானது சொல்லாதலின், சொல்லால் அறிவிக்கப் படுவது பொருளாகையால், அப்பொருளை உறுதிப் படுத்துவது அளவை நூலெனப் பெறப்பட்ட பின்னர், இலக்கண நூற் பயிற்சியும் அளவை நூற் பயிற்சியுமின்றி அறிவொளி விளக்கமும், அவ்வறி வொளி விளக்கமுமின்றி, மேதக்க வாழ்க்கையும், அறிந்து அடங்கும் இயல்புடைய மக்களுயிர்க்கு செவ்வனே நடத்தல் ஏலாமை கருதி 'எண்ணென்ப' எனத் தொடங்கும் தமிழ் மறையின் செவியறிவுறூஉவில் 'வாழு முயிர்க்கு' எனப் பொய்யில் புலவர் அடை கொடுத்துச் சாற்றியுள்ள மெய்யுரை ஊன்றி உணரற் பாலதொன்றே.

அறிவிப்பு.

நம் தமிழ்ப் பொழிலுக்குரிய ஆண்டுவரியை அனுப்பி வைக்கும் பொழிலுறுப்பினர்கள் "பொருளாளர், கரந்தைத் தமிழ்ச் சங்கம், கருந்திட்டைக்குடி P.O., தஞ்சாவூர்" என்றமுகவரிக்கு அனுப்பியுதவ வேண்டுகின்ருேம். இதுகாறும் பொருள் அனுப்பாத பொழிலுறுப்பினர்கள் அருள்கூர்ந்து உடனே பொருள் அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்ருேம். பொருள் அனுப்பாத உறுப்பினர்களுக்கு V. P. யில் பொழில் அனுப்பப்பெறும் என்பதனையும் அறிவிக்கின்ருேம்.

இங்ஙனம்,
பொழிலாசிரியர்,
கோ. சி. பெரியசாமிப் புலவர்.

பிரிட்ஜஸின் கல்லூரித் தோட்டம். 1917.

(College Garden 1917) என்றதன் மொழிபெயர்ப்பு.

(த. பு. நவநீதகிருட்டினன், அண்ணாமலை நகர்.)

பத்தொன்பதாம் நூற்றாண்டு இருபதாம் நூற்றாண்டுடன் கலந்து இணைந்த காலத்தின் சிறந்த ஆங்கிலக் கவிஞரில் ராபர்டு பிரிட்ஜஸ் (*1844—1930*) ஒருவரார். அவர், மரபுடன் இயைந்த சிறந்த பாக்கள் பலவற்றை இயற்றினதுமன்றி, ஆங்கிலச்செய்யுட்களையொட்டின புதுவகை யாப்பணியாலான நற்பாடல்கள் பலவற்றையும் எழுதினர். *1921*-ம் ஆண்டில் வெளியிடப் பெற்ற 'புதுச் செய்யுட்கள்' (New Verse) என்ற தலைப்புக்கொண்ட தொகுப்பில் '**கல்லூரித் தோட்டம்**' என்றதும் ஒன்றாம். *1914—18*-ஆண்டுகளில் நடந்த ஐரோப்பியப் பெரும்போர் புலவர் உள்ளத்து எழுப்பின எண்ணங்களை அது கூறும். அதை, ஒல்லும்வகை, வரிக்கு வரிப் பொருத்தமாயும் பொருள் சிதைவுறாமலும், யான் மொழிபெயர்த்தேன். எனவே அது தமிழ்ச் செய்யுட்களுக்குற்ற மரபினின்று வேற்றுமையானதாய்க் காணப்படும், எனினும் அதன் பாற்பட்ட கருத்துக்களையும் செய்யுட் போக்கின் நயத்தையும் எடுத்துக் காட்டலே, எனது நோக்கமானமையின், யான் அதை மொழிபெயர்த்தமைத்தவாறே வெளியிடத் துணிகிறேன். அறிஞர், இதில் காணும் மாறான பலதிறக் குற்றங்களும் என்பாற் பட்டனவேயன்றி, ஆங்கில முதல் நூலில் உள்ளவை அல்ல, எனவே கொள்ளல் வேண்டும்.

மாணவனது இதயத்து ஆழ்ந்துள்ளது, ஒருதோற்றம், வாழ்க்கை இறுதியற்றது—என்றும், விண்ணின் நிழலைத் தன்னில் காட்டும் ஏரியைநிரப்பப் பொங்கி யோடும் அருவியை ஒத்தது, அஃது என்றும்; தன்னிலெழும் எண்ணப்படி செயல் புரிதலையும் அன்றி சிந்தனையில் ஆழ்தலையும் பொறுத்து அவன், ஒருகால் தான்புனலையொத்தவன் எனவும், இன்னோரமையம் பொய்கையனைய வன்எனவும் எண்ணுவான்.

அன்பின் எழிலும் அமைதியின் அழகும் மகிழ்வும் களிப்பும் எல்லாம் அவற்றின் உறவான சிந்தனையால் பெருமை பெற்றனவாய் அவனது கொற்றத்திற்கு அமரத்துவம் அளித்து அலங்கரிப்பன; கற்பனையினது அணிகலன்கள் உடையவன் அவன்; அவை, தூய்மைகளும் தொழுதகைமைகளுமாம்; அவை கொண்டே கடவுளை அணுக அவன் துணிகிறான்; கிறித்துவை எழுந்தருளப் பண்ணி ஏத்தும் இன்னிசைப் பாக்களைப்பாடி, ஆலயங்களை தனதுஇசையெனும் தூபத்தால் நிரப்புவான், அவனது பாக்கியம் எல்லையில்லா வானுடன் ஒன்றிடலானது; உண்மையின் முதல்ஆற்றலான தொலைவிரிந்தபரப்பினிடை, கனவொன்றாய் அவன்கிடப்பான்? தன்உள்ளுயிர்ப்பினுள் உயிரையே மூச்சாய் ஈர்ப்பான், இடம் சூழ்ந்த தெளி காற்றை; அவனது மானிட

வுடல் அதனது எண்ணமின்றியே உயிர்த்தலைப் போன்று, அவனது குருதியோட்டத்துக் கடனாற்றும் தீவிர நாடித்துடிப்பை ஊக்குவித்தற்கென.

இன்னும், பொல்லாங்கெதுவாயினும் குறும்பெதுவாயினும் அவற்றின் முறையிலாக் குழப்ப மொய்ம்பினின்று பாய்ந்தெழுந்து அவனது மனத்தைப்பற்றிடின், அதற்கும் புகலிடம் தருவான்—பாவத்துடனும் முறையே உறைந்து அதனுடனும் நற்றோழனாவான். செவிசாய்ம்மின், அவன் தனது வேட்டைக் கழைக்கொம்பை மிக உற்சாகத்துடன் ஊதுதலை, தனது வேட்டையாடு மந்தையை அவற்றின் குருதிக் களத்திறகுச் சவுக்காலடித்து ஓட்டலை, இயற்கையின் வலிமையைத் தன் வசதிக் கேற்ப ஆட்டியாளும ஆண்மையைக் காண்மின்; தன் தேர்ச்சித்திறனாலேயே தன்னழிவு தேடிச்செல்லலையும், அவன் அகன் ஞாலத்தின் வெருட்டுவன்கண் வீறு தொலைபுகள் பொருவதறுகண் பாழ் பரப்பும் திறலுடையோன்; தீவிர உணர்வுமேலீடு நிமித்தம் தெவிட்டலுறும் நிலைமையை அடைவான்; தீங்கில்தோய்ந்து களிவெறிகொண்டு ஆடுவான்; தன் பொருளையெலாம் வீணே வாரியிறைத்துவிட்ட ஒருவன் போன்று வெட்கங்கெட்டவனாய், இறக்கும் தருவாயில், அவன அறிவான்; தனது எஞ்சிய தொரே பெருந்தன்மை, தன் வேதனையை ஆண்மை யுடன் பொறுத்துக் கொள்ளலே என. தம்மைத் தாமே வஞ்சித்துக்கொண்ட ஆன்மாக்களினது வறியோர் மருத்துவயில்லமென்ற, இவ்வுலகின்கண்.

இதயத்து மாசில்லா எவரும் இலர் என யான் திண்ணமாய் அறிவேன்; ஆயினும், யான் முத்தியின் நம்பிக்கையையும் கடவுளருளில் உண்மைப்பற்றையும் அருந்துகிறேன், முதுவேனிற் பகலில் இன்று, நிமிர்ந்தோங்கின எலுமிச்சை மரங்களின் கீழ்ச் சாய்ந்து கிடந்தவண்ணம், இக்காதிக சிறபக்கல்லூரியின் தொன்மைதோய்ந்த அழகின் நீழலில், இத்தலம் இன்பவமைதியின் உரிமையானதைவிட அமைதி மிக்கதாயுள்ளது, ஒருவந்தத்தின் ஆவி நிறைந்த வெறபின் முகங்கொண்டு, கற்போர் கூட்டமும் களிப்போர் ஈட்டமும் ஈங்கிருந்துபோய்விட்டன; ஏனெனில், நல்விளையாட்டயர் இளைஞரெல்லாம் தமது வீறுடன் சென்றுவிட்டனர் உவப்புடனேயே தொலைநாடுகளுக்கு நகரத்துடன் கொடும் சமரிட; தம் நாட்டைப் பாழாக்க வந்தோரினின்று அதைக் காப்பாற்றறகெனத் தமது இல்லங்களைப் பறி கொடுக்கச் செய்தனர்; அவர் திரும்பி வருவார் என்ற எதிர்நோக்கு வீணாசையைத் தவிர வேறெவ்வறிகுறியையும் விடாது போயினர். அந்தோ; திரும்பி வருபவர் எவரோ சிலர் மட்டுமேயாவரன்றோ? இறந்தோர் பெயர் காட்டும் நீண்ட பட்டியலில் நாடோறும் எத்தனை அன்பார்ந்த பெயர்கள் எழுதப்படுவன! ஆயினும் சிலரேனும் திரும்பி வருவர்; அவருடன் மற்றோரும் வருவர்; புனிற்றுயிர் தோன்றும, இன்றுமுழுதும ஈங்கு எவரும வரவில்லையாயினும், தனது இருட்டறைப் போந்த அவலச் சிந்தையாழ்ந்த தத்துவ விசாரிணி ஒருவனையும், தனது மண்ணுலகப் பாரமழுந்தின சிந்தனையைப் போன்றே மெல்லவே வெளி முற்றத்தில் உலவும் அவனையும், அரிவாள். தள்ளுவண்டி, துடைப்பம் கொண்டு நகரும் கிழத் தோட்டக்

காரணையும் தவிர, அவன் தன் திறணையும் பொழுதையும் செட்டு செய்தலில் தேர்ந்தவனாய், தங்கித் தங்கி அசைகிறான். பழம் நகரின் அலங்கத்துப் புல் வேய்ந்த சாய்ப்பினின்று நான் அவனது சோம்பிய நடத்தையைக் கவனிக்கிறேன்; கெடிகாரங்கள் கால மணிகளைக் காலந் தவறாது மாறிமாறி அடித்தலைக் கேட்டுக் கொண்டே. சிறு உருளைகளில் பிடிபட்டுவிட்ட தட்டல்களுடன் செல்லும் மந்தமான உபதேசங் கூறுவனவாய், பஞ்சாங்கங்களாய், அவை, எல்லையில்லாக் காலத்தின் சிறு கூறுகளைத் தவறாது காட்டுவன. எப்போதும் போல அடித்த அக் கொடும் மணிகளை எண்ணிக் கொண்டு வந்தேன்; கடந்துகொண்டும் இனிக்கடக்க வேண்டுவனமுமாம், இதயக் கனிவிலா அக் கொடும் மணிகள், இற்றைத் தீமை கடந்துபோம் வரை, இங்கிலாந்தின் எதிரி முறியடிக்கப் படும் வரை; இதையே, மகதலீன் கல்லூரிக் கோபுரத்தினின்று ஒவ்வொரு முழு மணியானபோதும் கலித்த மணியோசை வான் மருங்கோங்கி யெழுந்து அடக்கியாள் மகிழ்வுடன் பறை சாற்றுவிக்கின்றது.

இப்படி மணியின் பிறகு மணி ஊர்கிறது, நான் உணர்கிறேன் உருக்கழுடுருவினவனாய். என் மீது இசைந்து செல்லும் காலத்தின் வரம்பிலா ஓடை பாய்தலை, அனைத்தையும் அவையானவாறமைத்த இறைவனாணையின் கனப்புனலாம், அஃது யான் உள்ளவாறு என்னை ஆக்கியோன் அவனே; அவ்வோடையில், அவ்வோடையில், காய்த்தலின்றிக் கிடந்த வண்ணமாயிருக்க, வேனிற் காலத்து ஒரு நாட் காலை முழுதும் புல் வெளிபடர்ந்த குன்றுகளிடை அலைந்து திரிந்து நல் பகலில் இறங்கிவந்து, மலையருவி மருங்கு உயிர்ப்புமிலா பள்ளத் தாக்கடைந்து, வெப்பக்களை யாறுதற்கெனவும் விலங்கு பொது உடற் சுகம் பேணித் தேறி நலமுறுதற்கெனவும், ஆடை களைந்து வெற்றுடலுடன் அப்புனலில் மூழ்கிப் படுத்த ஒருவனையை, அவன் சுவைக்கிறான், தன்னுறுப் புக்களின்மீதும் உடம்பின்மீதும் தண்ணீரோட்டம் குதித்துப் பாய்தலை, பளிங்கு படர்ந்த ஆழமில் மட்டமடுவில் படுத்துக்கொண்டு, வானின்கீழ், மல்லாந்தவாறு திவளாமல்; அவன், தன் மீதூர்ந்த சிற்றலைகளின் நீவலினிமையை நுகருழி அவனது எண்ணங்கள் புனலின் நீரோட்டத்துடன் ஒன்றிடுகின்றன; அந்நீர் அவன்மீதோடி மென் திவலைகளாய் அவனைத் தட்டுகையில், அக் கற்களின்மீது தட்டி யொதுங்கின வெண்சவமன்ன அவனது ஆடையில்லாவுடல் குறுக்கே அடைத்துக் கொள்ள, நீரோட்டம் நொடிப் பொழுது தடங்கலுறுகிறது, அது கடந்து சென்று தனது திறையாம் உப்பைத் திரை தணியாக் கடலின் நெருக்கமுற்ற சேமிப்பினுள் செலுத்துமுன்.

1. Iazar-house; 2. Gothic; 3. Magdalen.

ஔவையாரும் பாரிமகளிரும்.

வித்துவான். ஔவை. சு. துரைசாமிபிள்ளை, 19-4-45-ல்
திருச்சி வானொலியிற் பேசியது.

தமிழ் நாட்டு மக்கட்கு நன்கு தெரிந்த பழம் புலவர்களில் ஔவையார் முதன்மையானவராவர். இவரைப் பற்றிக் கூறப்படும் கதைகளும் இவர் பாடியனவாகக் காட்டப்படும் பாட்டுக்களும் பல வாகும். சங்க நூற்பாட்டுக்களையும் வேறு சிலவற்றையும் துணை யாகக் கொண்டு ஔவையார்க்கும் பாரிமளிர்க்கும் உண்டாகிய தொடர்பினைக் காணலாம்.

ஔவையார் பொதுவாகத் தமிழகம் முழுவதும் சென்று ஆங் காங்கு நிறைந்த பண்பும் புகழும் படைத்த வேந்தர்களையும் செல்வர் களையும் பாராட்டிப் பாடிப் பரிசில் பெற்றுவருவது வழக்கம். ஆயி னும் இவர் தகடூரிலிருந்து ஆட்சி புரிந்து வந்த அதிகமான் நெடுமான் அஞ்சியிடமே சிறப்பன்புடையராய் அவனது அரசவையை அணி செய்துவந்தார். ஒரு காலத்தே, தன்னையுண்டவரை நெடிது வாழப் பண்ணும் அருநெல்லிக்கனி ஒன்று அதிகமானுக்குக் கிடைத்தது. அதனைத்தானுண்டு நெடிது வாழ்தலினும் ஔவையார் அதனை உண்டு நீடு வாழ்வது உலகிற்கு நலமாம் என்றெண்ணி அவர்க்குக் கொடுத்து உண்பித்தான். உண்ட பின்பே அதன் சிறப்பை அவன் ஔவையாருக்குத் தெரிவித்தான். அவன் பெருந்தன்மையைக் கண்டு வியந்த ஔவையார்,

“போரடு திருவின் பொலந்தார் அஞ்சி!
பால் பிறை திரு நுதல் பொலிந்தசென்னி
நீல மணிமிடற் றொருவன் போல
மன்னுக பெரும நீயே தொன்னிலைப்
பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது
ஆதல் நின்னகத் தடக்கிச்
சாதல் நீங்க எமக்கீத் தனையே.”

என்று பாடிப் பாராட்டினர். இதன்கண் நீலமணிமிடற் றொருவன் என்றது, விடத்தையுண்டதனுல் கருத்த கழுத்தையுடைய இறைவ னைக் குறிப்பதாம். இதனால் உண்டாரைச் சாகப் பண்ணும் நஞ்சி னைத் தான் உண்டு உண்டவரைச் சாகாதிருக்கும்படி செய்யும் அமிழ்தத்தை விண்ணோர்க்குக் கொடுத்த அந்த இறைவன் அருள் நிலை குறிக்கப்பட்டது. அந்த இறைவனைப் போல நீயும் நெடிது வாழச் செய்யும் நெல்லிக்கனியை எமக்குக் கொடுத்தாய் என்ற கருத்தை, “நீலமணி மிடற்றொருவன்போல, சிறியிலை நெல்லித் தீங்கனி குறி யாது சாதல் நீங்க எமக்கீத்தனையே” என்றார். மேலும் அமுதத்தை யுண்ணாத அவ்வொருவன் நிலைபெறுவது போல நீயும் இந் நெல்லிக்

கனியை யுண்ணுயாயினும் நெடிது வாழ்க என்ற கருத்தால் "நீலமணி மிடற்றொருவன்போல, மன்னுக பெரும நீயே" என்றார். இதனோடு நில்லாமல்,

"பூங்கமல வாவிசூழ் புள்வேளூர்ப் பூதனையும்
ஆங்கு வருபாற் பெண்ணை யாற்றினையும்—ஈங்கு
மறப்பித்தாய் வாளதிகா வன்கூற்றின் நாவை
அறுப்பித்தாய் ஆமலகம் தந்து"

என்றும் மேலும் பாடிப் பரவினார். அவனுக்காக ஒளவையார் தொண்டைமானிடம் தூது சென்று, அதிகமானைப் புகழ்ந்து,

"உண்டாயின் பதம் கொடுத்து
இல்லாயின் உடனுண்ணும்
இல்லோர் ஒக்கல் தலைவன்
அண்ணல் எங்கோமான்."

என்று பாராட்டி, தொண்டைமானை இகழ்ந்தும் அதிகமானைப் புகழ்ந்தும் கூறுவன அவரது மனத்திட்பத்தை விளக்குவன ஆகும். ஒருகால் ஒளவையார் எழில்மலைத் தலைவனான நன்னன் என்பவனைக் காணச்சென்றார்; அவன் ஒளவையாரை அவமதித்தான். அதற்குச் சிறிதும் அஞ்சாது, நீ என்னைக் கண்டும் காணாதவன் போல ஒழுகினாய்; என் பாட்டைக் கேட்டும் கேளாதவன் போல் செருக்கினாய்; இது நினக்குத்தகாது என்பாராய் ஒளவையார்,

"இருடீர் மணிவிளக்கத் தேழிலார் கோவே
குருடேயு மன்றுநின் குற்றம்—மருள்தீர்ந்த
பாட்டும் உரையும் பயிலாதன இரண்டு
ஓட்டைச் செவியும் உள."

என வெறுத்துப்பாடி நீங்கினார்.

ஒருகால் அதிகமான் பகைவரோடு பொருது பேரழிவு செய்த காலை, ஒளவையார் போரால் பலமக்கள் மாண்டொழிவது கண்டு மிக்க இரக்கமுற்று, அதிகமானை வேண்டி, "இப்போரை நிறுத்துக" என்று வேண்டினார். அவனும் நிறுத்தி அருள்மிக்க உள்ளம் உடையவனானான். அது கண்ட ஒளவையார், அவன் பேரருளை வியந்து,

"யாழொடுங் கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா வாயினும் தந்தையர்க்கு
அருள்வந் தனவால் புதல்வர்தம் மழலை
எனவாய்ச் சொல்லும் அன்ன ஒன்னார்
கடிமதில் அரண் பல கடந்த
நெடுமா னஞ்சிநீ அருளன் மாறே."

என்று பாடி மனங்குழைந்தார். இன்னும் அவர் அதிகமான் போரில் புண்பட்டது கண்டும், இறந்தமை கண்டும் பாடுவன உள்ளத்தை உருக்குவனவாம்.

ஔவையார்க்குத் தம்மையொத்த புலவர்களிடத்தே நன் மதிப்பும் பேரன்பும் உண்டு. அதிகமான் கோவலூர் வேந்தனுெடு பொருது அங்ககரைத் தாக்கிய போர் நிகழ்ச்சியைப் பரணர் என்னும் புலவர் அழகு திகழப் பாடினராம். அதிகமானைத் தாம்பாராட்டிப் பாட நேர்ந்தபோது ஔவையார், "அதிகமானே!

"சென்றமர் கடந்த நின் ஆற்றல் தோற்றிய
அன்றும் பாடுநர்க்கரியை; இன்றும்
பரணன் பாடினன் மற் கொல் மற்று நீ
முரண்மிகு கோவலூர் நூறி நின்
அரணடு திகிரி ஏந்தியதோளே."

என்று பாடுவார், "இன்றும் பரணன் பாடினன் மன்" என்று பரணரைப் பாராட்டுகின்றார்.

பாரி மகளரின் தந்தையான வேள் பாரி தமிழக முழுதும் தன் புகழ் பரப்பி மேம்பட்டிருப்பது கண்டு பொருமை கொண்ட தமிழ் வேந்தர், அவனது பறம்பு மலையைச் சூழ்ந்து முற்றுகை இட்டுக் கொண்டனர்.

முற்றுகை பல நாட்கள் நிகழ்ந்தது. பறம்பு மலையில் உள்ளார்க்கு உணவுப் பஞ்சம் ஏற்பட்டது. அதுகண்ட கபிலர் என்னும் புலவர் கிளிகளைப் பயிற்றி வெளியே செலுத்தி, ஆங்கு வயல்களிலிருந்து நெற்கதிர்களை கொணர்வித்து மக்களைக் காத்தனர். இச் செய்தியை அறிந்த ஔவையார் கபிலரது மதி நுட்பத்தையும் மன நலத்தையும் நயந்து, கிளிகளின் செயலை எடுத்து,

"உரைசால் வண்புகழ்ப் பாரி பறம்பின்
நிரைபறைக் குரீஇயினங் காலை போகி
முடங்குஒறச் செந்நெற் றரீஇயர் ஓராங்கு
இரை தேர் கொட்பினவாகிப் பொழுதுபடப்
படர்கொள் மாலைப் படர்தந் தாங்கு வருவர்."

என்று பாடு கின்றார்.

இவ்வாற்றால் பன்னாள் முற்றுகையிட்டும் தமிழ் வேந்தர் வேள் பாரியை வெல்லமாட்டாது ஓடினர். முடிவில் அவர்கள் வஞ்சனையால் வேள் பாரியைக் கொன்று பறம்பு மலையைக் கைப்பற்றிக் கொண்டனர். வேள் பாரியின் மகளிரைக் கபிலர் அழைத்துச் சென்று அரசகுமாரர் சிலரைக் கண்டு அம்மகளிரை மணந்துகொள்ள வேண்டுவார் இவர்கள்,

"நெடுமாப் பாரி மகளிர், யானே
தந்தை தோழன், இவர் என் மகளிர்."

யான் கொடுப்பக் கொண்மின்" என்றார். அவ்வேந்தர்கள் தமிழ் வேந்தர் பகைமையுண்டா மென்று அஞ்சி மறுத்தனர். முடிவில் அவர் அம்மகளிரை யழைத்துக்கொண்டு கோவலூர்க்குச் சென்று அங்கிருந்த பார்ப்பாரிடம் அடைக்கலமாக அவர்களை ஒப்படைத்தார். பார்ப்பாரிடம் வைத்த பொருட்குத் தீங்கு செய்யலாகாது என்பது அக்கால அரசியல். பின்பு அவர் சேரநாட்டுக்குச் சென்றார். திருக்

கோவலூரில் பார்ப்பார் ஆதரவில் பாரிமகளிர் இருந்து வருகின்றனர். இச்செய்தியை முற்றும் அப்போது தகடூரிலிருந்த ஒளவையார் அறிந்தார். அவருக்குண்டான துயரத்துக்கு அளவில்லை. உடனே சென்று அந்த மகளிர்களைக் காணவேண்டும் என்றெழுந்தார்.

அக்காலம் மழையும் குளிரும் மிக்க காலம். பழுத்த முதுமை நிரம்பிய ஒளவைக்கு அது தக்க காலமாகுமா? இருந்தாலும் அவர் உடம்பில் முதுமையே தவிர உள்ளத்தில் இளமை தான். இளமை மழை குளிருக்கு அஞ்சுமோ? அவரும் வந்தார் மழையும் வந்தது. கோவலூரை யடையும்போது பொழுதும் மறைந்தது; இருளும் பரந்தது; குளிரும் மிகுந்தது. மெல்ல நடந்தது சென்று பாரி மகளிர் இருந்த வீட்டைக் கேட்டுக்கொண்டு சென்று அடைந்தார். வர வேற்ற அம்மகளிருள் ஒருத்தி யோடிச் சென்று நீலச் சிற்றுடை ஒன்று கொண்டுவந்து ஒளவையாருக்குப் போர்த்துக் குளிரை நீக்கி, உணவுஉண்பித்தற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்யலானுள். மிக்க துயரத்தில் மூழ்கித் தடுமாறிய ஒளவையார் சிறிது தேறி அம் மகளிரையும் தேற்றினுர். அம்மகளிர் தமக்கு நீலச்சிற்றுடை போர்த்துக் குளிர் போக்கியதை யுணர்ந்தார். அம்மகளிரின் மன நிலையை அறிந்தார். இம்மகளிரின் தந்தையான பாரி தன்னைத் தன் அரண்மனையில் சில நாள் தங்குவிக்க எண்ணி வழிப்பறி கள்வன் போல் தன்னிடத்திலிருந்த பொன்னைப் பறித்த வரலாறும், பழைய னூரில் வாழ்ந்த காரி யென்பவன், களைக்கொட்டை அன்புடன் தந்து களை யெடுக்கச் சொன்ன செய்தியும், தகடூர் மன்னனுன சேரமான் தன்னேடு உடனிருக்கச் செய்வது குறித்து விருந்தினர் கூட்டத்தி லிருந்து வாராய் என அழைத்துக்கொண்ட செய்தியும் அவர்நெஞ்சில் எழுந்தன. அவர்களின் அன்பு நிலையை எண்ணினுர்: "அரம்பை யின் கீழ்க்கன்றும் கனியுதவும்" என்ற பழமொழியை நினைந்தார்; பெரு மகிழ்ச்சி பிறந்தது. அது பாட்டாய் வெளிவந்தது.

"பாரி பறித்த பறியும் பழையனூர்க்
காரியன் றீந்த களைக் கொட்டும்—சேரமான்
வாராயென வுரைத்த வார்த்தையும் இம் மூன்றும்
நீலச்சிற் றுடைக்கு நேர்,"

என்பது அப்பாட்டு. இப் பாட்டோசையில் ஒளவையின் பசியினை உணர்ந்த மூத்தவள் ஓடி இலை திருத்தி, ஒளவையை யுணவுண்ண வழைத்தாள். உணவைப் பரிமாறுங்கால் அவள் உள்ளத்தே நினைவு கள் பல எழுந்தன. ஒளவையார் தங்கள் பறம்பரண்மனைக்கு வந்திருந்தபோது தாங்கள் அளித்த உணவின் உயர்வை நினைந்தாள். "இப்போது அவ்வாறு செய்தற்கில்லையே; வெறுங் கீரைதானே சமைத்துள்ளோம்" என எண்ணினுள். நெஞ்சு கலங்கிற்று. உடம்பு சுருங்கிற்று; அவள் கையிலிருந்த கடகம் தளர்ந்து முன் கையில் வீழ்ந்தது. ஒளவையின் புலமை நிறைந்த கண்ணுக்கு இவை யெல்லாம் தெரிந்தன. அம் மகளிரை மகிழ்விக்க எண்ணி,

"வெய்தாய் நறுவிதாய் வேண்டளவும் தின்பதாய்
நெய்தா னளாவி நிறைவிட்டுப்—பொய்யே

அடகென்று சொல்லி யமுதத்தை யிட்டீர்
கடகஞ் செறியாதோகைக்கு,"

என்று பாடி மகிழ்வித்தார். மகளிர் இருவரும் பாட்டின் நயமறிந்து மகிழ்ந்திருந்தார்கள்.

இவ்வாறிருக்கையில், சில நாட்கள் கழிந்தும் முழு நிலா (பௌர்ணமி) வந்தது. அதனுடைய பால்போலும் வெள்ளிய நிலா எங்கணும் விரிந்து இன்பம் செய்தது. ஔவையார் அதனைக் காட்டி, "கலை நிரம்பிய உங்கள் முகம்போல முழுமதியம் ஒளி திகழ்வது காண் மின்," என்று சொல்லி இன்புறுத்துகின்றாள். அது கேட்டு மகளிர், முழுமதியம் வளர்வதும் தேய்வதும் போலச் செல்வர் வாழ்விலும் வளர்ச்சியும், வீழ்ச்சியும் உண்டு என்று அறிவுறுத்தக் கருதுகின்றார். ஔவை யார் என்று கருதுகின்றனர். அக்கருத்து அவர்கள் உள்ளத்தில் முன்னைய தங்கள் செல்வ நிலையையும் இற்றைய தாழ் நிலையையும் காட்டிற்று. கண்களில் நீர் அரும்பிற்று. அவர்கள் மலர் போன்ற வாயிலிருந்து தேன் போன்ற கருத்து அமைந்த பாட்டு ஒன்று பிறந்தது.

"அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்
எந்தையுமுடையேம் எம் குன்றும் பிறர் கொள்ளார்
இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவில்
வென்றெறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே."

என்று பாடினர். இதனைக் கேட்டதும் ஔவையார்க்கு அடக்க முடியாத துயரமுண்டாயிற்று. சிறிது நேரம் அனைவரும் அவலித்திருந்து ஒருவாறு தேறி உறங்கச் சென்றனர்.

சில நாள்கட்குப் பின் சேரநாடு சென்று இருந்த கபிலர் கோவலூர் வந்து சேர்கின்றார். ஔவையார் வந்திருப்பதைக் காண அவர்க்கு மிக்க மகிழ்ச்சி யுண்டாகிறது. நிகழ்ந்தது நினைந்து வருந்துவதை விட்டு இனி நிகழ வேண்டியதை நினைப்பது தக்கது என்று துணிந்து இம்மகளிர்க்குத் திருமணம் செய்ய வேண்டியதைப் பற்றி ஆராய்கின்றனர். ஔவையார் மனம் களித்தது. இவர்களுக்கு யானே இருந்து மணம் செய்விக்க விரும்புகிறேன் என்ற பொருள் அமைய,

"பாரிதாயும் இவர் பாலின்மை யொன்றல்லால்
சீரும சிறப்பும் செழித்தோங்க—நாரியர்தம்
கண்ணுலங் காணக் கடவேன் யான்." என்றிசைத்தார்.

கபிலரும் தாம் சேரநாட்டிலிருந்து இம்மகளிர் திருமணத்துக்கெனப் பொன்னும் பொருளும் பெற்று வந்து இருப்பதாகச் சொல்லி இன்புறுகின்றார். மேலும் ஔவையார் மகளிர் திருமணம் முடியும் வரையில் தான் உடனிருக்கப் போவதாகச் சொல்வது அவருக்குப் பேரின்பத்தைச் செய்கிறது. ஔவையார் இவ்வாறு மனம் கொள்ளுதற்குக் காரணம் பாரி செய்த அறமே என்று பாராட்டினார்.

இவ்வாறு இருக்கையில், பாரி மகளிரை ஏனை வேந்தர் மணப்பதற்கு அஞ்சுவது குறித்து ஆராய்ந்து முடிவில் திருக்கோவலூர்

மன்னனுன திருமுடிக்காரியின் புதல்வர் தெய்வீகன் திருக்கண்ணன் என்ற இருவருக்கும் திருமணம் செய்து தருவது என்று முடிபு செய்கின்றனர். மறுநாளே திருமுடிக் காரியையும் இது குறித்துக் காண்கின்றூர்கள்.

அக்கோவலூர் மன்னனும் பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்று அவர்கள் கருத்திற்கிசைந்து தன் புதல்வர்களை அழைத்து உசாவுகின்றூர். அவர்களும் அத்திருமணத்தை மனமார விரும்புகின்றூர்கள். திருமுடிக்காரி, "புலவீர் என் மக்களும் திருமணத்துக்கு இசைந்து உள்ளனர்; இனி பாரி மகளிரைக் கன்னி மாடத்துக்குக் கொணர்வது தக்கது" என்பானுய்,

"என் மக்கள் வாழ்விற் கியைந்தார் நன்பொன்னனையார்
புன் மக்கள் இல்லம் புகல் வேண்டா—மன் மக்கள்
வேந்தன் வேள் பாரி விறல் மகளிர் என் மனைக்கே
போந்தொளிர்க என்றுன் புகன்று."

இவ்வாறு சொல்லக் கேட்டதும் கபிலரும் ஔவையாரும் பாரி மகளிர் இருந்த மனைக்கு வந்து, அரச மகளிருக்கு அணிகளால் அவர்களை ஒப்பனை செய்து மிக்க சிறப்புடன் கன்னிமாடத்துக்குக் கொண்டு செல்கின்றனர். அம் மகளிரைக் கண்ட வேந்தனும் பெரு மகிழ்ச்சி அடைகின்றுன்.

இங்ஙனம் தன் உயிர்த்தோழனை வேள் பாரியின் மகளிரை மலையமான் புதல்வர்க்கு மணம் செய்வதென ஒப்படைத்து அவர் மணம் முடியும் வரை ஔவையாரையும் உடனிருக்க ஏற்பாடு செய்த கபிலர் தான் முன்பே செய்து கொண்ட சூளுறவின்படி அறிஞர் வியக்க, ஔவையும் மகளிரும் அருந்துயரெய்தத் தீப்பாய்கின்றூர். அங்கே கூடியிருந்த அரசரும் சான்றோரும் அவருக்குக் கல்நட்டுச் சிறப்புச் செய்கின்றூர்கள். இச் செய்தி திருக்கோவலூர் வீரட்டேசுரர் கோயில் கல் வெட்டில் இன்றும் நாம் காணுமாறு பொறிக்கப் பட்டிருக்கிறது.

சில நாட்களுக்குப் பின் ஔவையார் மலைய மானெடு ஆராய்ந்து திருமணத்துக்குரிய நாளைக்குறித்துத் தமிழ் வேந்தருக்கும், பிறருக்கும் ஓலை போக்குகின்றூர் எல்லோரும் தவருமல் கோவலூருக்கு வந்து சேர்கின்றனர். தமிழ் வேந்தரும், தம் முன்பிருந்தோர் பாரி மீது வீணே பொறுமைகொண்டு பாரியைக் கொன்று பழி தேடிக் கொண்டதை நினைந்து வருந்தித் தாமே அம் மகளிர்க்குத் தந்தையராயிருந்து திருமணம் செய்து தருதற் கிசையுமாறு ஔவையாரை வேண்டுகின்றனர், ஔவையாரும் அவர்களைப் பாராட்டுகின்றூர். திருமணம் நடைபெறுகிறது. சேரவேந்தன் முன்பே போந்து அங்கவையைத் தெய்வீகனுக்கு நீர் பெய்து தருகிறுன்; சோழவேந்தன் சங்கவையைத் திருக்கண்ணனுக்கு நீர் பெய்து தருகிறுன்; பாண்டி வேந்தன் தான் கொண்டு வந்த பெருஞ் செல்வத்தை இருவருக்கும் சீதனமாகத் தருகின்றுன்.

திருமணம் சிறப்பொடு முடிகிறது. எல்லோரும் மணமக்களை வாழ்த்திவிட்டு ஔவையாரை வணங்கி விடைபெற்றுச் செல்கின்றூர்கள்.

நாட்கள் சில கழிந்ததும் ஔவையார் தகடூருக்குப் போக விரும்பிப் பாரி மகளிரை விடை தருமாறு கேட்கின்றார். அம்மகளிர் அவரை வணங்கி நின்று,

> " தந்தையாய்த் தாயாய்த் தனித் தெய்வமாகியெம்முன்
> வந்து பெருவாழ்வின் வைத்திரால்—நுந்தம்மைச்
> சிந்தையிடை வைப்பதல்லால் செய்யும் கைம்மாறுதான்
> எந்த வுலகத்தும் இலை."

என்று சொல்லி விடைபகருகின்றார்கள்.

ஔவையாரும் மனம் மகிழ்ந்து, "தூண்டா விளக்கனையீர், தோ மின்றி வாழ்மின்" என வாழ்த்தி நீங்குகின்றார். பாரி மகளிர் இன்பவாழ்வில் இனிது இருக்கின்றனர்.

கரந்தைப் புலவர் கல்லூரி.

இவ்யாண்டு வேனில் விடுமுறைக்குப் பின்பு 2—7—45-ஆம் நாள் கல்லூரி வேலை தொடங்கும். வித்துவான் தேர்வுக்குரிய ஐந்து வகுப்புக்களும் தற்போது இங்கு இருக்கின்றன. பல்கலைக்கழகம், அரசியலார் ஆகிய இரு இடத்திலும் ஒப்பம்பெற்று நம் கல்லூரி இணைப்புற்றுள்ளது. மாணவரது படிப்பு, உடல்நலம், வாழ்க்கை முதலியவற்றிற்கு வேண்டிய நல்லாசிரியர் துணையும், இயற்கை வளனும், இட அமைப்பும், நூல் நிலையமும் வாய்க்கப்பெற்றது நம் கல்லூரியாகும். வித்துவான் புகு நிலை வகுப்பிற்கு ஆங்கிலத்தில் பள்ளியிறுதித் தேர்வு (S. S. L. C.) தகுதியுடைய மாணவரே தேர்ந்தெடுக்கப்பெறுவர். 31—5—'45 க்குள் விண்ணப்பங்கள் கல்லூரித் தலைவர் முகவரிக்கு வந்து சேரல் வேண்டும். 1. நன்னடை 2. செல்வ நிலை 3. படிப்பின் தகுதி முதலியவற்றிற்குத் தக்க சான்றுகளுடன் கல்லூரியில் கொடுக்கப்பெறும் விண்ணப்பத்தாளில் விண்ணப்பித்துக் கொள்ளல் வேண்டும். விண்ணப்பித்தோரைத் தலைவர் நேரிற் கண்டு தகுதி யறிந்த பின்னரே தேர்ந்தெடுப்பார்.

புகு நிலையிற சேர்ந்து பயிலும் தகுதியில்லாத அகவை குறைந்த மாணவர்க்கெனத் தனி வகுப்புக்கள் தொடங்கப்பெறும். அவை அரசியலாரது ஒப்பம் பெற்றனவாகும், ஆங்கிலம் கணக்கு, சரித்திரம், பொது அறிவு, பூகோளம் முதலிய பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்பெறும். இப்படிப்பில் தேர்பவர்கள் ஆங்கிலக்கல்லூரிக்குப் போவதற்கும் வாய்ப்புள்ளது. இவ்வகுப்பில் சேர விரும்பும் மாணவரும் மேற்குறித்த முறையில விண்ணப்பிக்க வேண்டும். குறைந்தது ஐந்தாம வகுப்பாவது தேர்ச்சியுற்றிருக்க வேண்டும்.

நல்லொழுக்கமும், வறுமையும், படிப்பாற்றலும் உள்ள மாணவர்க்குக் கட்டணமின்றி உண்டியும் உறையுளும் உதவப்பெறும்.

விளக்கு, புத்தகம், உடை முதலிய பிற வசதிகளை மாணவரே செய்து கொள்ளல் வேண்டும்.

குறிப்பு:— விண்ணப்பத்தாள் வேண்டுவோர் கல்லூரித் தலைவரிடம் நேரிலோ அன்றி 0—0—9 அஞ்சல் தலை அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்.

31—5—'45 க்குப் பிறகு வரும் விண்ணப்பங்கள் ஏற்கப்பெறமாட்டா.

பண்டித. P. R. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, M. A.
தலைவர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.

திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை M. A., M. L.,
அவர்கள் மறைந்தார்கள்.

கா. சு. பிள்ளை என்றும், எம். எல். பிள்ளை என்றும், தாகூர் சட்ட விரிவுரையாளர் என்றும், தமிழர்கள் பலப்பல பெயரிட்டழைக்க நிலைக்களனா யிலங்கிய தாகூர் சட்ட விரிவுரையாளர் திரு. கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ., எம். எல்., அவர்கள் 30—4—'45-ஆம் நாள் இரவு திருநெல்வேலியில், தமதில்லத்தில், இறைவன் திருவடி நீழலடைந்தார்கள் என்பதனைக் கேட்டு நடுக்குற்றோம். தமிழகஞ் செய்த தவப்பேற்றிற் றோன்றிய பிள்ளை அவர்களின் அறிவாற்றலை, ஆங்கிலப் புலமையினை, சட்ட நுணுக்கப் பேரறிவினை, தமிழியல் நுட்ப அறிவின் திறனைத் தமிழ்நாடு பயன்படுத்திக் கொள்ளாததோடு பிள்ளையவர்களைப் போற்றா தொழிந்ததுங் குறை, குறை, பெருங்குறை யெனக் கூறிக் கண்ணீர் பெருக்குகின்றோம். பிள்ளையவர்களின் பெருமைகள் விரிப்பிற் பெருகும் தொகுப்பின் எஞ்சுமாகையால் அச் செயலாற்ற ஆற்ற லற்றவரானோம். இனித் தமிழருள் இத்தகு பன்மொழிப் புலவர் ஒருவர் தோன்றல் எத்துணை நூறியாண்டுகள் கழியினும் அரிதினும் அரிதன்றோ? பலபடக் கூறி என்? தேவாரத் திருமுறைகளின் பிழம்பெனத் திகழ்ந்த பெரியார் மறைந்தார்; சட்ட நுணுக்கப் பேரறிஞர் சாய்ந்தார்; தமிழ்ப் பேராசிரியர், உரைநடைக் கோமான் ஒளிந்தார்; தமிழர் மாநாடுகளில் தலைமை தாங்குந் தனிப்பெருந் தலைவர் சாய்ந்தார்; தமிழரின் தன்மான வுணர்வு கெடவரும் பொழுதெல்லாம் அஞ்சாது எதிர்நின்று போராடிய அரும்பெருந் தலைவர் மறைந்தார்; சைவசித்தாந்த சாத்திரக் கருத்துக்களை எளிய, இனிய, தூய தமிழாக்கித் தந்த தண்ணளியாளர் மறைந்தார்; செந்தமிழ்ச் செல்வி இதழாசிரியர் இவ்வுலக வாழ்வினின்றும் நீங்கிச் சென்றார். இத்தகு பெருமகனாரும், இனிய தமிழ் மொழிக்கே இரவும் பகலுந் தொண்டியற்றியவருமாகிய எம். எல். பிள்ளை அவர்களின் இன்னுயிர் இறைவன் திருவடி நீழலில் இன்புற்றுத் திளைக்க இறைவனை வழுத்தி வணங்குகின்றோம். ஒன்றற்கும பற்றார்க் கெல்லாம் நினைவுக்குறி நாட்டுந் தமிழர்கள், நம், எம். எல். பிள்ளை அவர்களின் நினைவு உலகமுள்ள அளவும் நிலைத்து நிற்றற்குரிய ஒரு நினைவுக்குறியினை நாட்டி இப்பெரியாரின் புகழினை நிலைநிறுத்த வேண்டுகின்றோம்.

இங்ஙனம்,
பொழிலாசிரியர்.